Registered as a News Paper at Sri Lanka   பக்கங்கள் 04   விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம் 02   பெப்ரவரி   (23 02 1991)   சனிக்கிழமை   ஓசை 05

## வயோதிபரை மீட்க குதித்தவர்கள் மயங்கிய நிலையில் மீட்பு

(செ. த. மை.)

ஆழமான கிணற்றுக்குள் தவறிவிழுந்த வயோதிபரின் உயிரைக் காப்பாற்றுவதற்கு அந்தக் கிணற்றுக்குள் குதித்த மூவர் உயிராபத்தான நிலையில் மீட்கப்பட்டனர். வயோதிபர் சடலமாக மீட்கப்பட்டார். இந்தப் பரிதாப சம்பவம் பளையில் இடம்பெற்றது. பளையைச் சேர்ந்த சிவகுரு (வயது 75) என்பவர் அந்தப் பகுதியிலுள்ள ஆழமான கிணற்றினுள் தவறி (4ஆம் பக்கம் பார்க்க)

## இன்று நண்பகலுக்குள் வெளியேறாவிடில்

# தரைப்போர் தொடங்கும்; ஈராக்கிற்கு எச்சரிக்கை

(வாஷிங்டன்)

இன்று சனிக்கிழமை நண்பகல் பன்னிரெண்டு மணிக்கு முன்பதாக குவைத்தை விட்டு வெளியேற ஈராக் பூரண சம்மதம் தெரிவிக்காவிடின் தரை யுத்தம் ஆரம்பமாகும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நேற்றிரவு அறிவித்துள்ளார்.

ஈராக் தனது உரிமைகளையும், நிலப்பரப்பையும், அதி பத்தியத்தையும் தொடர்ந்து பாதுகாக்கும் என்றும் வானொலி அறிவித்தது.

அதேவேளை வளைகுடாப் போரின் தரைத் தாக்குதல் தொடங்கியுள்ளது என்று பாக்தாத் அறிவித்துள்ளது ஆனால் அமெரிக்க தரப்பில் இதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குவைத்தில் ஈராக் அணிகள் மீது அமெரிக்கப் படைகளும், அதன் சார்பு நாட்டுப் படைகளும் பாரிய அளவிலான தரைத்தாக்குதலை ஆரம்பித்துள்ளதாக பக்தாத் வானொலி அறிவித்துள்ளது. தாக்குதலின் அளவு, தாக்கப்படும் இலக்குகள் ஆகியவற்றைக் கொண்டு தரைப்போரை அமெரிக்கா ஆரம்பித்ததை உணர்த்துகிறது என்றும் பக்தாத் வானொலி அறிவித்தது.

பாக்தாத் வானொலி அறிவிப்பின்படி தரைப்போர் இலங்கை நேரப்படி நேற்றுப் பகல் 12-45 மணிக்குத் தொடங்கியது. இதனால் அனைத்து அமைதி முயற்சிகளையும் முறியடிக்கக் கூடிய இந்த நடவடிக்கைக்கு அமெரிக்காவும், அதன் கூட்டாளிகளுமே பொறுப்பேற்க வேண்டும் என்று பாக்தாத் வானொலி அறிவித்தது.

### சமாதானத்தைக் குழப்பும் தரைப்போர் விளைவுகளுக்கு அமெரிக்காவே பொறுப்பு

(மொஸ்கோ)

தரை யுத்தத்தை ஆரம்பித்து சமாதான முயற்சிகளை அமெரிக்காவும், அதன் சார்பு நாடுகளும் முறியடிக்குமானால், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அந்த நாடுகளே பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வாறு கொர்பசேவின் மேற்கு ஆசியத் தூதுவர் பிரிமக்கோவ் தொலைக் காட்சிப் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

### சோவியத் சமாதானத் திட்டத்தை ஈராக் ஏற்றுக் கொண்டது

(மொஸ்கோ)

குவைத்தில் இருந்து தமது இராணுவத்தை முழுமையாகவும், நிபந்தனை எதுவும் இன்றி விலக்கிக் கொள்வதற்கு அஸீஸிற்கும், சோவியத் ஜனாதிபதி கொர்பசேவிற்கும் இடையே நடைபெற்ற இரண்டு மணி நேர பேச்சு

### வீரவணக்கம்

புஷ்பராஜா

(யாழ்ப்பாணம்)

## வெருகலில் ச. தே. செஞ்சிலுவை வாகனம் மீது இராணுவம் தாக்கு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகனமொன்று பலத்த தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.

நேற்று முன்தினம் மாலை நான்கு மணிக்கு மூதூரில் இருந்து வெருகல் பகுதிக்கு வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வாகனமொன்றின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டனர்.

இத் தாக்குதலால் வாகனம் பலத்த சேதமடைந்தது (மு)

## பங்குனி மாதமுத்தமிழ்விழா பற்றிய கலந்துரையாடல்

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகள் கலை, கலாசாரப பிரிவினரால் வரும் பங்குனிமாத இறுதிவாரத்தில் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ள முத்தமிழ் விழா பற்றிய கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடைபெறவிருக்கின்றது.

மிகப் பிரமாண்டமான அளவில் நடாத்த உத்தேசித்துள்ள இந்த பத்துநாள் முத்தமிழ் விழா பற்றிய ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும், திட்டங்கள், விழாமுறைகள், சுகாதாரம், போக்குவ (4ஆம் பக்கம் பார்க்க)

## உருத்திரபுரத்தில் பாடசாலை மீது விமானக் குண்டு வீச்சு

### 8 மாணவர் காயம்; ஒருவர் காலை இழந்தார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உருத்திரபுரம் ஏழாம் வாய்க்கால் என்ற இடத்தில் பாடசாலை மற்றும் பொது மக்கள் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப்படையினரின் குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் நடாத்தியதில் எட்டுப் பாடசாலை மாணவர்கள் காயமடைந்துள்ளதுடன் பாடசாலைக் கட்டடமும், அருகேயுள்ள ஐந்து வீடுகளும் பலத்த சேதமடைந்துள்ளன.

ஏழாம் வாய்க்கால் சந்தியில் உள்ள இந்துமகா வித்தியாலயத்தில் நேற்றுக்காலை 7.45 மணியளவில் பாடசாலையின் மாணவர்கள் வந்து குழுமிய சமயம் அந்தப் பாடசாலை மீது மூன்று குண்டு வீச்சு விமானங்கள் மாறிமாறி குண்டுகளை வீசித்தாக்குதல் நடாத்தின.

இந்தத் தாக்குதலில் இப்பாடசாலையின் ஆறு ஆம் மாணவன் ஐ. துஷ்யந்தன் (வயது 11 கணேசபுரம்) என்பவர் காலை ஒன்றை இழந்தார். இவரின் தங்கையான ஆண்டு நான்கு மாணவி ஐ. துஷ்சாலினி (வயது 9) என்பவரும் ஆண்டு பதினொன்று மாணவிகளான சி. நந்தினி (வயது 15); (4ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் கைதாகியவர்கள் கதி என்னவெனத் தெரியவில்லை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பொதுமக்கள் தொடர்ந்தும் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்

காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருவதாகவும் கடந்த டிசம்பர் மாதம் கைது செய்யப் (4ஆம் பக்கம் பார்க்க)

## அளம்பிலில் குண்டுவீச்சு; நான்கு பொதுமக்கள் படுகாயம்

(வாஷிங்டன்)

இன்று சனிக்கிழமை நண்பகல் பன்னிரெண்டு மணிக்கு முன்பதாக குவைத்தை விட்டு வெளியேற ஈராக் பூரண சம்மதம் தெரிவிக்காவிடின் தரை யுத்தம் ஆரம்பமாகும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நேற்றிரவு அறிவித்துள்ளார்.

அதேவேளை வளைகுடாப் போரில் தரைத் தாக்குதல் தொடங்கியுள்ளது என்று பாக்தாத் அறிவித்துள்ளது ஆனால் அமெரிக்க தரப்பில் இதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குவைத்தில் ஈராக் அணிகள் மீது அமெரிக்கப் படைகளும், அதன் சார்பு நாட்டுப் படைகளும பாரிய அளவிலான தரைத்தாக்குதலை ஆரம்பித்துள்ளதாக பக்தாத் வானொலி அறிவித்துள்ளது. தாக்குதலின் அளவு, தாக்கப்படும் இலக்குகள் ஆகியவற்றைக் கொண்டு தரைப்போரை அமெரிக்கா ஆரம்பித்ததை உணர்த்துகிறது என்றும் பக்தாத் வானொலி அறிவித்தது.

பாக்தாத் வானொலி அறிவிப்பின்படி தரைப்போர் இலங்கை நேரப்படி நேற்றுப் பகல் 12-45 மணிக்குத் தொடங்கியது. இதனால் அனைத்து அமைதி முயற்சிகளையும் முறியடிக்கக் கூடிய இந்த நடவடிக்கைக்கு அமெரிக்காவும், அதன் கூட்டாளிகளுமே பொறுப்பேற்க வேண்டும் என்று பாக்தாத் வானொலி அறிவித்தது.

ஈராக் தனது உரிமைகளையும், நிலப்பரப்பையும், அதிபத்தியத்தையும் தொடர்ந்து பாதுகாக்கும் என்றும் வானொலி அறிவித்தது.

## சமாதானத்தைக் குழப்பும்

## தரைப்போர்விளைவுகளுக்கு அமெரிக்காவே பொறுப்பு

(மொஸ்கோ)

தரை யுத்தத்தை ஆரம்பித்து சமாதான முயற்சிகளை அமெரிக்காவும், அதன் சார்பு நாடுகளும் முறியடிக்குமானால், அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அந்த நாடுகளே பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வாறு கொர்பசேவின் மேற்கு ஆசியத் தூதுவர் பிரிமாகோவ் தொலைக் காட்சிப் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

## சோவியத்சமாதானத்திட்டத்தை ஈராக் ஏற்றுக் கொண்டது

(மொஸ்கோ)

குவைத்தில் இருந்து தமது இராணுவத்தை முழுமையாகவும், நிபந்தனை எதுவும் இன்றியும் விலக்கிக் கொள்ள ஈராக் ஒப்புக்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் மொஸ்கோவில் ஈராக்கிய வெளியுறவுத்துறை அமைச்சர் தாரிக் அஸிஸிற்கும், சோவியத் ஜனாதிபதி கொர்பசேவிற்கும் இடையே நடைபெற்ற இரண்டு மணி நேர பேச்சுவார்த்தைக்குப் பின்னர் இந்த அறிவிப்பு மொஸ்கோவினால் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி கொர்பசேவின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சோவியத் சமாதான திட்டம் அமெரிக்காவால் நிராகரிப்பு

(லண்டன்)

சோவியத்தின் எட்டு அம்ச சமாதானத்திட்டத்தை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

இதேவேளை அமெரிக்க சார்பு நாடுகளில் சில சோவியத்தின் திட்டத்தை வரவேற்றுள்ளன. சோவியத்தின் இத் தப்போர் ஓய்வு யோசனைகள் ஐ. நா. தீர்மானத்திலிருந்து பிறழ்வதாகவும், இது ஏற்புடையதல்ல என்றும் புஷ் நிர்வாகத்தைச் சேர்ந்த உயர் அரச அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார். இந்த எட்டு

(4ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா ஈராக்கிற்கு 1கோடி ரூ. மருந்து அன்பளிப்பு

(டில்லி)

ஈராக்கிற்கு ஒருகோடி பெறுமதியான மருந்துப் பொருள்களை இந்தியா அனுப்பி வைத்துள்ளது என இந்திய வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

இதுபற்றி இந்த அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் ஈராக்கிய சுகாதார அமைச்சகம் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையிலும், மனிதாபிமான அடிப்படையிலும் அனுப்பிவைத்துள்ளதாக தெரிவித்துள்ளது.

அனுப்பிவைக்கும் மருந்துப் பொருள்களை ஈராக் செஞ்சிலுவைச் சங்கம் டெஹ்ரானில் இருந்து எடுத்துச் செல்லும் என்றும், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் இதனை விநியோகிக்கும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வீரவணக்கம்

### புஸ்பராஜா

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் புஸ்பராஜா (தியாகராஜா அகிலன், நீர்வேலி) என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார்.

### லவனிதா, சங்கரி

கட்டுவன் இராணுவ முகாமில் இருந்து நேற்றுக்காலை 11-30 மணியளவில் வெளியேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் லவனிதா (நிர்மலா கார்த்திகேசு, கரம்பன் ஊர்காவற்றுறை) சங்கரி (மதுராந்தி விமலநாதன், திருக்கடலூர். திருமலை) ஆகிய இருபெண்போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

### மணி

மட்டக்களப்பு மாவட்டத்தில் இத்துள் என்னுமிடத்தில் நேற்றுமுன்தினம் மாலை 6 மணிக்கு சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் மணி என்றபோராளி வீரமரணமடைந்துள்ளார்.

இவ் வீரவேங்கைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

விடுதலைப்புலிகளின் கலை, கலாசாரப் பிரிவினரால் வரும் பங்குனிமாத இறுதி வாரத்தில் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படவுள்ள முத்தமிழ் விழா பற்றிய கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வீதி

…வருகின்றது.

மிகப் பிரமாண்டமான அளவில் நடாத்த உத்தேசித்துள்ள இந்த பத்துநாள் முத்தமிழ் விழா பற்றிய ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும், நிகழ்ச்சிகள், விழாஒழுங்குகள், சுகாதாரம், போக்குவ

(4ஆம் பக்கம் பார்க்க)

## உருத்திரபுரத்தில் பாடசாலை மீது விமானக் குண்டு வீச்சு

### 8 மாணவர் காயம்; ஒருவர் காலைஇழந்தார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உருத்திரபுரம் ஏழாம் வாய்க்கால் என்ற இடத்தில் பாடசாலை மற்றும் பொது மக்கள் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப்படையினரின் குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் நடாத்தியதில் எட்டுப்பாடசாலை மாணவர்கள் காயமடைந்துள்ளதுடன் பாடசாலைக் கட்டடமும், அருகேயுள்ள ஐந்து வீடுகளும் பலத்த சேதமடைந்துள்ளன.

ஏழாம் வாய்க்கால் சந்தியில் உள்ள இந்துமகா வித்தியாலயத்தில் நேற்றுக்காலை 7.45 மணியளவில் பாடசாலையின் மாணவர்கள் வந்து குழுமிய சமயம் அந்தப் பாடசாலை மீது மூன்று குண்டு வீச்சு விமானங்கள் மாறிமாறி குண்டுகளை வீசித்தாக்குதல் நடாத்தின.

இந்தத் தாக்குதலில் இப் பாடசாலையின் ஆறாம் ஆண்டு மாணவன் ஐ. ஜெயந்தன் (வயது11 கணேசபுரம்) என்பவர் காலை ஒன்றை இழந்தார். இவரின் தங்கையான ஆண்டு நான்கு மாணவி ஐ. ஜெயசாலினி (வயது 9) என்பவரும் ஆண்டு பதினொன்று மாணவிகளான சி. நந்தினி (வயது15);

(4ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் கைதாகியவர்கள் கதிஎன்னவெனத் தெரியவில்லை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பொதுமக்கள் தொடர்ந்தும் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பது பற்றி சரியான தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை கடந்த மாதம் கைது செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருவதாகவும் கடந்த டிசம்பர் மாதம் கைது செய்யப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அளம்பிலில் குண்டுவீச்சு: நான்கு பொதுமக்கள் படுகாயம்

(மணலாறு)

சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த மூன்று குண்டு வீச்சு விமானங்கள் மணலாறில் உள்ள அளம்பில் பகுதியில் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் நான்கு பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவிலிருந்து மணலாறு அளம்பில் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் நான்கு பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். வீடுகள், கட்டடங்கள் என்பனவும் சேதமாக்கப்பட்டுள்ளன. (மு)

## வட்டுவாகல், தண்ணீரூற்று, முள்ளியவளை

## விமானக்குண்டு வீச்சினால் பெண்காயம்; வீடுகள்சேதம்

(முல்லைத்தீவு)

சிறிலங்கா விமானப் படையைச் சேர்ந்த குண்டுவீச்சு விமானங்கள் முல்லைத்தீவுப் பகுதியில் மேற்கொண்ட விமானத்தாக்குதலில்பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார், ஐந்து வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் இருந்து 8;45 மணிவரை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வட்டு

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஜனநாயகத்தை மீட்டெடுக்க ஐக்கியப்பட வேண்டும்

### - சிறிமாவோ

(கொழும்பு)

ஜனநாயகத்தை மீட்பதற்குச் சகல எதிர்க்கட்சிகளும் ஐக்கியப்பட வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவிசிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று முன்தினம் கொழும்பில் கூட்டம் ஒன்றில் பேசும் போது தெரிவித்தார்;

அவர் தொடர்ந்து பேசுகையில், எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவதன் மூலம்தான் பிரேமதாஸ வின்சர்வாதிகார ஆட்சியை எதிர்த்துப் போரிட முடியும் என்றார்.

## மன்னாரில் பொதுமக்கள் கைது துன்புறுத்தல்

(மன்னார்)

மன்னார் போக்குவரத்துச் சபை எரிபொருள் நிலையத்தில் முகாமிட்டுள்ள இராணுவத்தினரும் சில தேசவிரோத கும்பல்களும் அப் பகுதியில் தேடுதல் நடாத்தி அப்பாவிப் பொதுமக்களை கைதுசெய்து துன்புறுத்தி வருகின்றனர்.

## இளம் பெண் தற்கொலை

(வவுனியா)

ஈச்சங்குளத்தில் குடும்பப் பிரச்சினை காரணமாக இளம் பெண்ணொருவர் இருவி

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

கழுவித் துப்பரவு செய்த அரைப்போத்தல் திரவம் கொள்ளக்கூடிய போத்தல்கள் தேவை. மில்க்வைற் - யாழ்ப்பாணம். (B/2063)

### விற்பனைக்கு

துரிதமான சிக்கன சலவைக்கு மில்க்வைற் திரவ சவர்க்காரம் Liquid Soap விளக்கெரிக்கவேப்பெண்ணை தாவர சுத்தி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்திலும் விற்பனையாகிறது (B-2039

மறை ஸ்வின்ஸ் தொடை - நாடகம் விலை ரூபா 30/- வெளியீடு விற்பனை பூபால சிங்கம் புத்தகசாலை. B-2029)

### கவர்ச்சிகர விளம்பரம்

(கொழும்பு)

கவர்ச்சி மிக்க சம்பளம், உணவு சீருடை, இருப்பிட மருத்துவ வசதிகளுடன் வேலை வாய்ப்பு வழங்கப்படுவதாக இலங்கை வான்படை அரசாங்க வர்த்தமானியில் விளம்பரம் செய்துள்ளது. இலங்கை வான்படையின் நிரந்தர மற்றும் தொண்டர் படைகளில் மருத்துவம், பல்வைத்தியம் ஆகிய பணிகளுக்கான அரசாணைபெற்ற அலுவலர்களுக்கான விண்ணப்பங்கள் கோரிய விளம்பரம் மேற்படி சலுகைகளை அறிவித்துள்ளது.

## மன்னார் மாவட்டம் - வங்காலையில்

# 6000 தமிழரை விரட்டி விட்டு

# சிறிலங்கா ராணுவம் முகாமிட்டது

(மன்னார்)

வங்காலையூடாக மன்னாருக்கு சென்று கொண்டிருந்த அதிபர், உப அதிபர் உட்பட பலபேர் துமக்களையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்துள்ளனர். இதில் முருங்கன் மகாவித்தியாலய பிரதி அதிபரும், பயிற்றப்பட்ட கணித ஆசிரியருமான என். ரி. பி குசையப்பு கோரமாகக்கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டுள்ளார்.

இவர்களுடன் கைதான முருங்கன் கொத்தணி அதிபர் ஏ. செபமாலை, புதுக்கமம் அதிபர் யாஸ்ரின், லெம்பேட் உயிலங்குளம் அதிபர் ஏ பங்கிரஸ், வைத்துவாயன்குளம் பிரதி அதிபர் ஏ சிம்போ, வங்காலை மகாவித்தியாலய ஆசிரியர் மனியெஸ் என்பவர்களைப் பற்றிய விபரம் இதுவரை அறியப்படவில்லை

வங்காலை ராணுவ முகாம் தள்ளாடியில் இருந்து 2 மைல் தொலைவில் உள்ளது. இங்கு இருந்த சுமார் 6000 தமிழ் மக்களை விரட்டிவிட்டு சிறிலங்கா இராணுவம் தொடர்ந்தும் அங்கு முகாமிட்டுள்ளது

இந்தக் கிராமத்தில் இருந்து வெளியேறிய மக்களில் 50 வீதமானோர் இந்தியாவுக்குச் சென்றுள்ளனர். மீதியானோர் மடு, மன்னார் போன்ற இடங்களுக்கும் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்.

வங்காலையை இறங்குதுறையாக்கவே இந்தக் கிராமத்தை சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்துள்ளது. தரை வழியாக தள்ளாடி இராணுவ முகாமிற்கு தளபாடங்களையும், உணவுப் பொருட்களையும் கொண்டு செல்ல முடியாது இதனால் கப்பல் மூலம் வங்காலைக்கு வந்து பின்னர் அவை தள்ளாடிக்கு அனுப்பப்படும். ஆனாலும் சவுதிபார் எனும் இடத்தின் மூலம் இராணுவத்திற்குத் தேவையான பொருட்களை பெறவாய்ப்புக்கள் இருந்தபோதும் வங்காலையையே இராணுவம் ஆக்கிரமித்துள்ளது.

இந்தக் கிராமத்தில் உள்ள வீடுகளும், பாடசாலை மற்றும் ஆலயங்கள் யாவும் உடைக்கப்பட்டு தளபாடங்கள் மற்றும் பெறுமதியான பொருட்கள் இராணுவத்தினரால் சூறையாடப்படுகின்றன

### கடமை

காலை வேளையில்  
கட்டுவன் அரணிலே  
காவலில் நிற்கையில்  
கண நேரம்  
நினைவுகள் சுழன்றது

நிலாவெளிக் கிராமமும்  
நீண்ட வயல்களும்  
மனதினில் விரிந்தது  
ரணகளம் இதயத்தில்  
வடுவாய் எழுந்தது

என் அம்மாவும் தங்கையும்  
அநியாயக் காரரால்  
அழிக்கப் பட்டதும்  
எனது வீடும் தோட்டமும்  
தொழுவத்தில் நின்ற பசுக்களும்  
அவர்களின் பார்வையில்  
பயங்கர வாதியாய் ஆனதும்  
நேற்றுத்தான் நான் அறிந்தது

நாளை ஓர் நாள்  
நானும் மடியலாம்  
என்னையும் நீங்கள்  
மறந்து போகலாம்  
ஆயினும் கூட  
என் கடமையை உணர்கிறேன்  
அதனால் தொடர்ந்தும்  
களத்தில் நிற்கிறேன்

- ரவி

## பயிலுனர் ஆசிரியர்களுக்கு விசேட கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண பயிலுநர் ஆசிரியர்களுக்கு விசேட கல்விக் கருத்தரங்கு ஒன்று கொழும்பு கொத்தாராமா விளையாட்டரங்கில் நடைபெற உள்ளது. ...ரக் கோவை ஒன்றை மூன் கூட்டியே கனிக் ஜெயவீர, கல்வி பணிப்பாளர், கல்வி அமைச்சு, இசுருபாய பத்திரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும் என்றும் மாகாண கல்விச் செயலாளர்


யாழ்ப்பாண பல நோ. கூட்டுறவுச் சங்கம் - வரையறுக்கப்பட்டது

### பதவி வெற்றிடம்

கீழ்காண் பதவியை நிரப்பும் பொருட்டு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத் திகதி: 5 - 3 - 1991

வயதெல்லை: 25 - 40 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது)

பிணைப்பணம்: ரொக்கப் பிணை ரூபா 1000/-

(1) பதவி - சுருக்கெழுத்து / தட்டெழுத்தாளர் (தமிழ்)

சம்பளத்திட்டம்: 304 II - (13, 805 - 25x7 35x8 1260 (கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட மேலதிக படிகளும் சேர்ந்து வழங்கப்படும்).

தகமைகள்:

(அ) கூட்டுறவுப் பணியாளரின் சுருக்கெழுத்து / தட்டெழுத்தாளர் பதவியில் 12 ஆவது சம்பளத் திட்டத்தில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

(ஆ) க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ் பாஷை உட்பட ஆறு பாடங்களில் சித்தியுடன் தமிழ் சுருக்கெழுத்தில் வேகம் 1 நிமிடத்துக்கு 60 சொற்களும் தமிழ் தட்டெழுத்தில் வேகம் 1 நிமிடத்தில் 25 சொற்களும் இருப்பதுடன் சுருக்கெழுத்து/தட்டெழுத்தாளர் பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

குறிப்பு:

1. விண்ணப்பங்கள் யாவும் எமது காரியாலயத்தில் இருந்து பெறப்படும் விண்ணப்பப் படிவங்களில் மாத்திரம் நிரப்பி அனுப்பப்படுதல் வேண்டும்.
2. கல்விச் சான்றிதழ் பிறப்புச் சான்றிதழ், வசிப்பிடத் தகைமைப் பிரதிகளும் விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.
3. சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கும், சங்கப் பணியாளர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
4. விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விண்ணப்பிக்கும் பதவி" குறிப்பிடப்படல் வேண்டும்.
5. மேலதிக விபரங்களுக்கு சங்கக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

யாழ். ப. நோ. கூ. சங்கம்-வ துூ  
231, ஸ்ரான்லி வீதி, பொது முகாமையாளர்.  
யாழ்ப்பாணம். 18-02-1991 (B-2065)





## பெப்ரவரி 23

1985ஆம் ஆண்டு நாவலூரில் சேர்ந்து வந்த இராணுவத்தினரின் திடீர்த் தாக்குதலினால் வீரமரணமடைந்த


### க. பொ. த. உயர் தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான வெளியீடுகள்

கேள்வியும் நிகழ்வலும்  
விலை ரூபா 18.00  
நவீன அரசியற்கோட்பாடுகள்  
விலை ரூபா 45.00  
குறியீட்டு அளவையியல்  
விலை ரூபா 30.00  
விஞ்ஞானமும் விஞ்ஞான முறையும்  
விலை ரூபா 35.00  
நடைமுறை விடயங்கள் விலை ரூபா 40-00  
அளவையியல் விலை ரூபா 12 - 50

வெளியீடு  
பட்டப்படிப்புகள் கல்லூரி  
148/1 ஸ்ரான்லி வீதி,  
யாழ்ப்பாணம்.  
(B/2044)


### 6 ஆம் மாத நினைவலைகள்



வீரவேங்கை

களில் மருத்துவம், பல்வைத்தியம் ஆகிய பணிகளுக்கான அரசாணைபெற்ற அலுவலர்களுக்கான விண்ணப்பங்கள் கோரிய விளம்பரம் மேற்படி சலுகைகளை அறிவித்துள்ளது.

வலிகாமை இராணுவ முகாம் தள்ளடியில் இருந்து 2 மைல் தொலைவில் உள்ளது. இம் இருந்த சுமார் 6000 தமிழ் மக்களை விரட்டிவிட்டு சுற்


## க. பொ. த. உயர் தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான வெளியீடுகள்

கேள்வியும் நிரல்லும்
விலை ரூபா 18.00
நவீன அரசியற்கோட்பாடுகள்
விலை ரூபா 45.00
குறியீட்டு அளவையியல்
விலை ரூபா 30.00
விஞ்ஞானமும் விஞ்ஞான முறையும்
விலை ரூபா 35.00
நடைமுறை விடயங்கள் விலை ரூபா 40-00
வடிவியல் விலை ரூபா 12-50

வெளியீடு
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B/2044)


## 6 ஆம் மாத நினைவஞ்சலி



வீரவேங்கை
இன்னாசா
சாந்தி (நாயகி)

வீரஜனனம்
10-10-72

வீரமரணம்
29-09-90

(பலாலி ஸ்ரீலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலின்போது வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை)

புனிதர்களின் புனித வேள்வியிலே
தமிழீழம் மலருமம்மா
தமிழீழ விடுதலை வேட்கையில்
தோன்றி மறைந்த ஆயிரம் ஆயிரம்
ஒளி விளக்குகளில் நீயும் ஒன்றாகவே
காவியமாகி விட்ட எம்குல நாயகியே
நாளை மலரும் தமிழீழம் - அதில்
உன் கதையும் சேர்ந்து வரும்
வேளை வரும் அப்போது நாமும்
உன்னிடம் சேர்ந்திடுவோம்
வீரவேங்கையே வாழிய
உன் தியாகம் வாழியவே!

கோண்டாவில் வடக்கு,
பி. ஆர். டி. எஸ்:
(R-1128)

பெற்றோர், சகோதரர், உற்றார், உறவினர், நண்பர்கள்.

கண நேரம்
நினைவுகள் சுழல்றது

நிலாவெளிக் கிராமமும்
நீண்ட வயல்களும்
மனதினில் விரிந்தது
நாளுகணம் இதயத்தில்
வருடலாய் எழுந்தது

என் அம்மாவும் தங்கையும்
அநியாயக் காரரால்
அழிக்கப் பட்டதும்
எனது வீடும் தோட்டமும்
தொழுவத்தில் நின்ற பசுக்களும்
அவர்களின் பார்வையில்
பசுங்கர வாரியாய் ஆனதும்
நேற்றுத்தான் நான் அறிந்தது

நாளை ஓர் நாள்
நானும் மடியலாம்
என்னையும் நீங்கள்
மறந்து போகலாம்
ஆயினும் கூட
என் கடமையை உணர்கிறேன்
அதனால் தொடர்ந்தும்
களத்தில் நிற்கிறேன்

- ரவி

## பயிலுனர் ஆசிரியர்களுக்கு விசேட கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண பயிலுநர் ஆசிரியர்களுக்கு விசேட கல்விக் கருத்தரங்கு ஒன்று கொழும்பு பெந்தாராமா விளையாட்டரங்கில் நடைபெற உள்ளது.

மார்ச் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகும் இக் கல்விக் கருத்தரங்கிற்கு வட கிழக்கின் சகல பயிலுநர் ஆசிரியர்களும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் தமது சுயவிபரக் கோவை ஒன்றை மூன் கூட்டியே சுனில் ஜெயவீர, கல்வி பணிப்பாளர், கல்வி அமைச்சு, இசுருபாய பத்திரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் மாகாண கல்விச் செயலாளர் கேட்டுள்ளார்.

இந்த ஆசிரியர்களின் போக்குவரத்து ஒழுங்குகளை சகல மாவட்ட கல்விப் பணிப்பாளர்களும் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (க)

## செஞ்சிலுவைச் சின்னம் பொறிக்கப் பணிப்புரை

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள சகல அரசினர் வைத்திய சாலைகளின் கூரைகளின் மேலும் செஞ்சிலுவை சின்னத்தை பெரிய அளவில் பொறிக்கும்படி யாழ் சுகாதார சேவைப் பணிப்பாளர் சகல அதிகாரிகளுக்கும் பணித்துள்ளார்.

சுற்றறிக்கை மூலம் விடுக்கப்பட்டுள்ள மேற்படி வேண்டுகோளில் இவற்றை உடனடியாக மேற்கொள்ளுமாறும் இவற்றுக்குத் தேவையான பெயின்ற் வகைகளை அந்தந்தப் பகுதிகளிலுள்ள தொண்டர் நிறுவனங்கள், நலன்புரிச் சங்கங்கள் ஆகியவற்றில் பெற்றுக் கொள்ளும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சேவைக்காலப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

மருதனாமடம் கல்விக் கோட்டத்திற் சங்கீத, நடன பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிவகுப்பு இம் மாதம் 25 ஆந் திகதி யாழ். சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

அதிபர்கள் தமது பாடசாலையிற் கற்பிக்கும் சங்கீத நடன ஆசிரியர்களை இந்த வகுப்பில் தவறாது பங்குபற்ற அனுப்பிவைக்குமாறு யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (க)


2. கல்விச் சான்றிதழ் பிறப்புச் சான்றிதழ், வசிப்பிடத் தகைமைப் பிரதிகளும் விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.
3. சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கும், சங்கப் பணியாளர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
4. விண்ணப்பங்களை யாவும் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "விண்ணப்பிக்கும் பதவி" குறிப்பிடப்படல் வேண்டும்.
5. மேலதிக விபரங்களுக்கு சங்கக் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

யாழ். ப. நோ. கூ. சங்கம்-ஐ ஜு
221, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 18-02-1991

பொது முகாமையாளர்.
(B-2065)




## நினைவு கூருகின்றோம்

## பெப்ரவரி 23

1985ஆம் ஆண்டு நாவலூரில் சேர்ந்து வந்த இராணுவத்தினரின் திடீர்த் தாக்குதலினால் வீரமரணமடைந்த

**2ஆம் லெப். வெள்ளை**
(பேனாட் எட்வேட் ஸ்ரக் - இருதயபுரம் மட்டக்களப்பு)

இதே ஆண்டு நாயாற்றுவெளியில் வீரமரணமடைந்த

**விஜி** (சு. றேமன் றெக்குலாஸ், தேனுடையான் மன்னார்)

1986 ஆம் ஆண்டு விபத்தில் மரணித்த

★ **குணம்** (இ. குணரத்தினம் - கட்டைபறிச்சான்)

1988ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

**குமரன்** (பிரகாஸ் அம்பரசு - அலம்பில், முல்லைத்தீவு)

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்துடனான மோதலில் வீரமரணமடைந்த

**தயா** (த. தயாபரன் - மட்டக்களப்பு)

**பீற்றர்** (கு. நடராசா - கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ மேற் குறிப்பிடப்பட்டிருக்கும் மாவீரர் குணம் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2058)

## சிந்தனைக்கு

மக்களை, மக்களால், மக்களே ஆளும் ஆட்சி முறைதான் ஜனநாயகம் ஆகும்.

— ஆபிரகாம் லிங்கன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 23-02-1991

தொலைபேசி

ஆசிரியபீடம்: 028 - 2839 நிர்வாகபீடம்: 2208

த. பெ. எண். 03


## பாராளுமன்ற அடிதடியில் பலியாகும் 'ஜனநாயகம்'

சிறிலங்கா பாராளுமன்றத்தில் அடிக்கடி பதினைந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மேல் காயம். உறுப்பினர்களின் உடைகளைக் கிழித்தனர். கோவைகளினால் தாக்கிக் கொண்டனர். கைகலப்பில் கலந்து கொள்ளாதவர்கள் கோஷமிட்டனர், கூக்குரலிட்டனர். அமைச்சர் பார்த்துக் கொண்டிருந்தார். இறுதியில் எதிர்க்கட்சிகள் யாவும் பாராளுமன்றத்தை பகிஷ்கரித்தன. தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரையில் பாராளுமன்றம் செல்வதில்லை என அறிவித்துள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மனம்போல பேசக் கூடாது என்ற ஜனநாயக மரபு மாறி பாதுகாப்பு உத்தரவோடே பாராளுமன்றம் செல்ல முடியும் என்ற நிலை தோன்றியுள்ளது.

இந்திய பாராளுமன்றத்திலும் ஏறத்தாழ இதை ஒத்த ஒரு நிலையே காணப்படுகிறது. நேற்று முன்தினம் ஆரம்பமாகிய பாராளுமன்றக் கூட்டத் தொடரில ஜனாதிபதி வெங்கட்ராமனின் உரையை எதிர்க்கட்சிகள் புறக்கணித்தன. இருசபைகளும் கூட்டாக நடந்த இந்தக் கூட்டத்தில அரைவாசி அளவு உறுப்பினர்களே கலந்து கொண்டுள்ளார்கள். அதே வேளை இந்திய பாராளுமன்றத்திலும் மாநில சட்டசபையிலும் அடிதடி, குழப்பம், கூக்குரல்கள் நிகழ்வது சாதாரண விடயங்கள் ஆகும். இந்தியா, சிறிலங்கா பாராளுமன்றங்களில் அண்மைக் காலத்தில் இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ச்சியாக ஏற்பட்டவண்ணமுள்ளன. இந்த நிலையில் இந்நாடுகளுக்குப் பாராளுமன்ற அமைப்பு முறையே பொருத்தமானதா என்ற சந்தேகம் உருப்பெற்று வருகின்றது

ஜனநாயக அமைப்பு முறைக்குப் பொதுவானதாகக் கொடுக்கப்படும் அடிப்படை விதிமுறைகளே இன்று

# 5000 மக்கள் இடம் பெயர்வு

# 50 வீடு சேதம்; வாகனங்கள் எரிப்பு

(வவுனியா)

வவுனியாவில் கடந்த பத்தாம் திகதி சிறிலங்கா ராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ராணுவ நடவடிக்கைகளின் போது ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்தும் நூற்றுக்கணக்கானோர் வீடுகளை இழந்தும் உள்ளனர்.

நொச்சிமோட்டை, பேயாடிக்குளம், தாண்டிக்குளம், மரக்காரம்பளை, பத்தினியார் மகிழங்குளம், ஓயார் சின்னக் குளம், புதுக்குளம், மாணிக்க வளவு, சாஸ்திரி கூளாங்குளம் மற்றும் நெடுக்குளத்திலிருந்து வெளியேறிய பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்த இடங்களில் இருந்து 5000க்கும் மேற்பட்ட மக்கள் வெளியேறினர். இதில் 1500 பொதுமக்கள் அகதிகளாக மன்னார் மடு திருப்பதியில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இந்த இராணுவ நடவடிக்கைகளின் போது 50 க்கு மேற்பட்ட வீடுகள் சேதத்திற்குள்ளாக்கப்பட்டன. இதில் ஒன்பது வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டன. பேயாடிக்குளத்தில் ஒன்றும் நொச்சிமோட்டையில் இரண்டும் புதுக்குளத்தில் மூன்றும், மரக்காரம்பளையில் மூன்றும் எரிக்கப்பட்டன.

நெடுங்குளம், புதுக்குளம் சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் மூன்று வீடுகள் விமானத் தாக்குதலாலும்; சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் இரண்டு வீடுகளும், புதுக்குளம், பாவற்குளம் பகுதியில் இரண்டு வீடுகளும் ஆட்லெறி ஷெல்தாக்குதலினால் சேதமாக்கப் பட்டன. நொச்சிமோட்டைப் பகுதியில் 34 வீடுகள் சேதமாக்கப்பட்டன.

இதனை விட நெடுக்குளம் பகுதியில் 10வீடுகளும், புதுக்குளம்பகுதியில் 30 வீடுகளும் உடைக்கப்பட்டு ராணுவத்தினரால் கொள்ளையடிக்கப் பட்டது.

மற்றும் புதுக்குளம் பகுதியில் தாக்குதல் நடந்த வேளையில் 25 மாடுகள் கொல்லப் பட்டன. 50மாடுகளுக்கு மேல் படுகாயம் அடைந்தன.

78,000 ரூபா பெறுமதியான நான்கு கடைகள் பேயாடிக் குளம்பகுதியில் எரிக்கப் பட்டன. அத்துடன் 5000 ரூபா பெறுமதியான அன்றாட வியாபாரக் கடைகளும் எரிக்கப்பட்டன. மன்னார் வீதியில் 3 ஆம் கட்டைச் சந்திக்கு அருகில் இருந்த இரண்டு அரிசி ஆலைகளும் குண்டு வைத்து தகர்க்கப் பட்டது.

5, 25,000 ரூபா பெறுமதியுடைய இரண்டு வாகனங்கள் ஒன்று ஈ. எல் எவ். வான் 350, வியாபாரப் பொருள்கள் ஏற்றிய நிலையில் ஒரு உழவு இயந்திரம் ஆகியனவும் முற்றாக எரிக்கப்பட்டன. அத்துடன் இரண்டு வாகனங்களும் இராணுவத்தால் கொண்டு செல்லப் பட்டன

பேயாடி கூழாங்குளத்தில் 10, 00, 000 ரூபா பெறுமதியான கிராம சபைக் கட்டடமும் குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.

## தலாய்லாமாவைச் சந்திக்க ஜோன் மேயர் மறுப்பு

(லண்டன்)

லண்டன் செல்லவிருக்கும் தலாய்லாமாவைச் சந்திக்க பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேயர் மறுத்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா லண்டன் செல்லவுள்ளார். இவரைத் தான் சந்திப்பது முறையானதல்ல என்று திபெத்துக்கான பாராளுமன்றக் குழுவிற்கு ஜோன் மேயர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக தலாய் லாமா விஜயம் செய்யும் ஒவ்வொரு நாட்டையும் அவரை வரவேற்க வேண்டாம் என சீனா தெரிவித்திருந்தது

இதே நேரம் சீனாவைப் பகைத்துக்கொள்ள பிரித்தானியப் பிரதமர் அஞ்சுகிறார் என திபெத்திய பாராளுமன்றக் குழுவின் தலைவர் ஏலெக்ஸ் பிரபு தெரிவித்தார்.

அத்துடன் சமாதான நோபல் பரிசு பெற்ற ஒருவரைச் சந்திக்க பிரதமர் மறுப்பது வழக்கத்திற்கு மாறானது எனவும் அவர் கூறினார்.

## நிர்வாகிகள் தெரிவு

கந்தர்மட சனசமூக நிலைய வருடாந்த நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது. தலைவராக புலவர் செ. து. தெட்சணாமூர்த்தியும் உபதலைவராக செ.யோகுணரத்தினமும் செயலாளராக சுதாகரும், பொருளாளராக செ.த.குகானந்தனும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும், கலை, கலாசாரம் பிரிவுக்கான நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டன.

## கூட்டம்

யாழ். மாவட்டத்திற்கான

[illegible]

ஜனநாயக அமைப்பு முறைக்குப் பொதுவானதாகக் கொடுக்கப்படும் அடிப்படை விதிமுறைகளே இன்று இந்த நாடுகளில் பின்பற்றப்படவில்லை பெரும்பான்மை மக்களால் ஆதரிக்கப்படும் கட்சியே ஆட்சியில் இருக்க வேண்டும் என்பது ஜனநாயக மரபு. ஆனால் இந்தநிலை இந்நாடுகளில் இன்றில்லை மேலும் சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும், எதிர்க் கட்சிகளின் குரலுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதும், அவர்களுக்கு கௌரவம் வழங்கப்படவேண்டும் என்ற நிலையும் இன்று இந்நாடுகளின் ஜனநாயக பாராளுமன்ற அமைப்பு முறையில் இல்லை.

உலகின் பெருந்தொகையான மக்களைக் கொண்ட ஜனநாயக நாடு என இந்தியாவைக் கூறிக் கொண்டாலும் அங்கு பெரும்பான்மை மக்கள் ஆதரவைக் கொண்ட கட்சிகள் ஆட்சியில் இல்லை பெரிய கட்சிகளில் இருந்து ஆட்சி அதிகாரத்திற்காக கலைந்தோடிய உதிரிகளே ஆட்சியில் இருக்கின்றார்கள். இந்திய ஜனாதிபதியே சில கட்சிகளின் எடுப்பார் கைப்பிள்ளை போன்று ஜனநாயக விரோத செயற்பாடுகளை மேற் கொண்டுள்ளார் இந்தியாவின் மத்தியில் சிறுபான்மை அரசை பாதுகாக்கும் அதேவேளை மாநிலங்களில் பெரும்பான்மை அரசை கலைத்து அரசியல் அமைப்பு விதிகளுக்கு மாறாக செயல்பட்டுள்ளார்.

இலங்கையிலும் அதை ஒத்த நிலையே காணப்படு கின்றது. நாட்டில் பெரும் வன்முறைகளுக்கு மத்தியில் தேர்தலை நடத்தி, நாட்டின் மொத்த வாக்காளர்களில் பெரும்பகுதியினர் கலந்து கொள்ளாத தேர்தல் மின் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கம் அமைத்துள்ளனர். ஜனநாயக நாடுகளில் உள்ள தனிமனித உரிமைகள் யாவும் நீண்டகாலமாக அவசரகாலச் சட்டங்கள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டுமுள்ளன. அத்தோடு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியினால் பாராளு மன்றத்தின் செயற்பாடு வலுவிழந்து விட்டது.

மேலும் இந்த நாடுகளில் எதிர்க்கட்சிகளினதும் சிறுபான்மை இனங்களினதும் உரிமைகள் எவையும் பாதுகாக்கப்படுவதாகவும் இல்லை. அதே போன்று எதிர்க்கட்சிகளும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதை நோக்காகக் கொண்டுள்ளனவே ஒழிய நாட்டின் நலனைப் பற்றிச் சிந்திப்பவையாகவில்லை.

இந்நிலையில் இந்நாடுகளுக்கு பாராளுமன்ற 'ஜனநாயக' ஆட்சி அமைப்பு முறை பொருத்தப் பாடுடையதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. காலனித் துவத்தின் வருகையால் இந்நாடுகளில் புகுத்தப்பட்ட இந்த பாராளுமன்ற கட்சிமுறை உண்மையில் இந்த நாடுகளுக்கு அந்நியமானது தான். இதனால் பொருத்த மற்ற காலனித்துவத்தின் ஏனைய அம்சங்கள் தூக்கி எறியப்படுவது போன்று பாராளுமன்ற அமைப்பும் தூக்கி எறியப்படவேண்டியதா?

---

[illegible]
விஜயம் செய்யும் ஒவ்வொரு ... கூறினார்.

## இந்திய குற்றச்சாட்டை உறுதிப்படுத்த வேண்டாம்

(லண்டன்)

காஷ்மீர தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் ஆயுதங்கள் அளிப்பதாக இந்தியா கூறும் குற்றச் சாட்டை உறுதிப்படுத்தும் வகையில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் என்று பாகிஸ்தானை பிரித்தானியா கேட்டுக் கொண்டிருக்கிறது.

நேற்று முன்தினம் பிரித்தானிய பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரித்தானிய துணை வெளியுறவு அமைச்சர் காஷ்மீர்ப் பள்ளத் தாக்கில் உள்ள போராளிகள் பாகிஸ்தானிடம் இருந்து ஆயுதங்கள் பெறுவதாக இந்தியா கூறும் குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் வகையில் எந்த நடவடிக்கையையும் மேற் கொள்ளாதிருக்குமாறு பாகிஸ்தானை அவர் கேட்டுக் கொண்டார்.

ஆனால் ஜம்மு காஷ்மீரில் வன்முறை நிகழ்வதையும் தாம் கண்டிப்பதாக அவர் தெரிவித்தார்.

## வரவு செலவு கணக்கிற்கு காங்கிரஸ் ஆதரவு அளிக்கும்

**- சந்திரசேகர்**

(டில்லி)

இந்தியப் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் கொண்டு வரப்பட்ட செலவுக் கணக்கு திட்டத்திற்கு இந்திரா காங்கிரஸ் கட்சி முழு ஆதரவினை அளிக்கும் என பிரதமர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்

நேற்று முன்தினம் இந்தியப் பிரதமர் சந்திரசேகரும் இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ் காந்தியும் இது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள் என பாராளுமன்ற விவகார அமைச்சர் எஸ் பி மாளவியா இதனைத் தெரிவித்தார்.

---

## தலவாக்கொல்ல மடக்கும்பரயில் 20 வீடுகள் தீக்கிரை

(ஹற்றன்)

தலவாக்கொல்ல மடக்கும்பர தோட்டத்திலுள்ள புதுக்காடு பிரிவில் குடியிருப்பொன்றில் ஏற்பட்ட தீ விபத்தால் 20 வீடுகள் எரிந்து சாம்பராகியுள்ளன

கடந்த திங்கட் கிழமை மாலை ஏற்பட்ட இத் தீ விபத்தினால் 85 பேர் வீடுகளை இழந்துள்ளனர். இவர்கள் மேற்படி தோட்டத்தில் உள்ள பிள்ளை பராமரிப்பு நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

குடியிருப்புகளை மலையக முன்னணியின் தலைவர் பெ சந்திரசேகரன் சென்று பார்த்து ஆறுதல் தெரிவித்தார்.

இந்தத் தீ விபத்து பற்றிய காரணம் இதுவரை அறியப் படவில்லை.

---

## கூட்டம்

யாழ். மாவட்டத்திற்கான இந்த ஆண்டின் 2 ஆம் கட்ட உலர் உணவு விநியோகம் தொடர்பான விசேட ஆலோசனைக்கூட்டம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெறும் அனைத்து உதவி அரசாங்க அதிபர்களையும் கலந்து கொள்ளும்படி மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார் (ச)

## மீண்டும் குடியமர மறுப்பு

(பொத்துவில்)

திருக்கோவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதிகள் மீண்டும் தமது குடியிருப்புப் பகுதிகளில் குடியமர அச்சம் தெரிவித்துள்ளனர்.

காரைதீவு, சம்மாந்துறை, சவளக்கடை, வீரமுனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அகதிகளை மீண்டும் சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வந்தபோதே அவர்கள் இவ்வாறு அச்சம் தெரிவித்துள்ளனர்.

''எங்களது உயிர் உடைமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்படாத நிலையிலும், ஊர்காவல் படையினரின் அட்டகாசம் இப்போதும் இருந்து வருவதாலும் எங்களால் இருப்பிடங்களுக்குச் செல்லமுடியாது'' என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## 2025-ம் ஆண்டில் 850 கோடி

(கொழும்பு)

உலக சனத்தொகை 2025 ஆவது வருடமளவில் 850 கோடியாக உயரலாம் என யுனிசெப் தாபனம் அறிவித்துள்ளது.

தற்போதைய உலக சனத்தொகை 530 கோடி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்

வும், இக்குறித்தவிபரங் களை அமெரிக்காவிற்கு அனுப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் அமெரிக்கா மொஸ்கோவின் இந்த அமைதித்திட்டங்களில் சில அம்சங்கள் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது இந்த யோசனைகள் குறித்து அமெரிக்கா தனது கூட்டணி நாடுகளுடன் ஆலோசனை நடத்திவருகிறது.

இதுபற்றிக் குறிப்பிட்ட அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் இந்த நடவடிக்கைகளில் சிலவற்றை அமெரிக்கா அதிருப்தியுடன் நோக்குகின்றது என்றும், தாம் ஏனைய நாடுகளுடன் பிரதானமாக பிரித்தானியா, பிரான்ஸ், எகிப்து மற்றும் கனடாவுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேநேரம் அரபு நாடுகள் மொஸ்கோவின் இந்த யோசனைத் திட்டங்களை ஆதரித்த அதேவேளை, மேலை நாடுகள் அதிருப்தியுடன்பார்க்கின்றன.

**சோவியத்**

அம்சத் திட்டம் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டதை விடச் சிறப்பானதாகத் திருத்தித் தயாரிக்கப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஜோன் மேஜர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இந்த அமைதித் திட்டத்தை பிரிட்டனும் முழுமையாக ஏற்கவில்லை எனவும் ஜோன் மேயர் அறிவித்தார்.

பிரான்ஸும் இந்த யோசனைகளை வரவேற்றுள்ளது. ஐ நாவில் உள்ள அரபு நாடுகளின் பிரதிநிதிக்குழுக்களும் சோவியத்தின் இந்த எட்டு அம்சத் திட்டத்தை வரவேற்றுள்ளன.

உருத்திரபுரத்தில் வே. நிலானி ஆகியோர் படுகாயமடைந்ததுடன் மேலும் நான்கு பாடசாலை மாணவர்கள் சிறுகாயங்களுக்குட்பட்டனர்.

பாடசாலைக் கட்டடமும் இப்பகுதியில் இருந்த வர்த்தக நிலையம் ஒன்றும் ஐந்து வீடுகளும் இந்தத் தாக்குதலில் சேதமடைந்தன. உருத்திரபுரம் பகுதியில் நாலாவது தடவையாக இந்தக் குண்டுவீச்சு நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(49, 85), (க). (மு)

**மன்னாரில்**

பட்ட பி மோகனசுந்தரம் (வயது 25 என்பவரை தாம் கைது செய்ததாக ஆரம்பத்தில் ஒப்புக்கொண்ட இராணுவத்தினர் தற்போது அவரைப் பற்றி எமக்கு எதுவும் தெரியாது என்று கைவிரித்து விட்டதாகவும் அவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

ஏனையவர்களுக்கு தற்போது என்ன கதி நேர்ந்தது என்பது பற்றி இதுவரை எதுவும் தெரியவில்லை (85)

**வயோதிபரை**

வீழ்ந்து விட்டதாகவும், இவரைக் காப்பாற்றுவதற்கு ஒருவர் முதலில் கிணற்றுக்குள் குதித்து நீருள் தத்தளித்ததாகவும். இவரைத் தொடர்ந்து அடுத்தடுத்து இருவர் கிணற்றுக்குள் குதித்து மூர்ச்சையடைந்து கிடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனை அறிந்த அந்தப்பகுதி மக்கள் வயோதிபரை சடலமாகவும், மற்றைய மூவரையும் மயக்க நிலையிலும் மீட்டெடுத்தனர். பின்னர் முதலுதவிச் சிகிச்சையின்பின் உயிர்தப்பினராம்.

## விநியோகத்தை உடன் முடிக்கவும்

(யாழ்ப்பாணம்)

தற்போது யாழ். மாவட்டத்தில் வழங்கப்பட்டு வரும் இந்த ஆண்டுக்கான முதலாம் கட்ட உலர் உணவு விநியோகத்தை உடனடியாக நிறைவு செய்யும்படி சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களையும் செயலக அத்தியாவசிய சேவைகள் பிரிவு கேட்டுள்ளது. (க)

## குவைத்திற்கு இந்திய அமைதிப்படை

(டில்லி)

இலங்கைக்கு அமைதிப் படை என்ற பெயரில் வந்த இந்திய இராணுவம் குவைத்துக்கும் போகவுள்ளதாம்

வளைகுடாவில் அமைதி காப்பதில் இந்தியாவும், அபர்லாந்தும் முக்கிய பங்காற்ற முடியும் என்று இந்தியாவுக்கு அரசமுறைப் பயணமொன்றை மேற்கொண்டிருக்கும் அயர்லாந்து வெளியுறவு அமைச்சர் டில்லியில் தெரிவித்துள்ளார்.

**பங்குனி**

சத்து ஒலி, ஒளி, மேடையமைப்பு, சுற்றாடல் பாதுகாப்பு முதலியவற்றில் ஆலோசனைகளையும் வழங்கக்கூடிய பொது மக்கள், கலைஞர்கள் சமூக சேவையாளர்கள் போராட்ட உணர்வுள்ளவர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் அனைவரையும் இந்தக் கலந்துரையாடல் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் கலைகலாசாரப் பிரிவினர் கேட்டுக்கொள்கின்றனர்.

இவ்வாண்டு முதல் ஆண்டு ஒன்பது மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (க)

பெண்ணே இவ்வாறு ஒருமி நாசினி அருந்தித் தற்கொலை செய்துள்ளார். (மு

# 37 ஆம் நாள் போர்

★ சோவியத் முன்வைத்த சமாதானத் திட்டத்தை வரவேற்றுள்ள பிரான்சு சில அம்சங்கள் மேலும் தெளிவு படுத்தப் படல் வேண்டும் எனக் கூறியுள்ளது.

★ ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன் இருக்கும்வரை அதற்கு பொருளாதார உதவிகள் வழங்குவது சாத்தியமாகாது என்று ஜப்பான் அறிவித்துள்ளது.

★ சோவியத் முன் வைத்த சமாதானத் திட்டத்தை ஈராக் அங்கீகரித்த பின்னும் போர் நடவடிக்கைகள் தொடரப்படுதல் நியாயப்படுத்த முடியாதது என்று ஈரான் கூறியுள்ளது.

★ ஈராக் ஜனாதிபதியாக சதாம்ஹுசைன் இருக்கும் வரை வளைகுடாவில் அமைதிக்கும் அவ்வப்போது ஊறு விளைவித்துக்கொண்டே இருப்பார் என இஸ்ரேல் கூறியிருக்கிறது

★ சோவியத் திட்டத்தில் சில பற்றாக்குறைகள் இருப்பினும் முன்னர் வைக்கப்பட்ட திட்டங்களிலும் பார்க்க இது முன்னேற்றகரமானது என பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயர் கூறியுள்ளார்.

# மொஸ்கோ ஊடாக ராஜீவ் தெஹ்ரான் பயணம்

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராஜீவ்காந்தி ஈரானிய அதிபர் ரப்சன்ஜானி விடுத்த அழைப்பின் பேரில் தெஹ்ரான் செல்லவுள்ளார்.

வளைகுடா நெருக்கடியிற்கு சமாதான தீர்வுகாண உழைப்பதற்கு ராஜீவ் காந்தி விரும்புவதாகவும், தெஹ்ரான் செல்ல முன்னர் மொஸ்கோ சென்று கொர்பசேவுடன் பேச்சு நடாத்த இருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. இந்தியாவின் அதிகாரபூர்வமானகுழு வெளிவிவகார இணை அமைச்சர் திக் விஜய்சிங் தலைமையில் தெஹ்ரான் செல்லும் சமயம் ராஜீவ் காந்தியின் குழுவினரும் தெஹ்ரானில் இருப்பர் எனத்தெரியவருகிறது.

**விமானக்குண்டு**

வாகல் தண்ணீருற்று முள்ளியவளைப் பகுதிகளில் விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் விக்கினேஸ்வரி புஷ்பம் என்ற பெண் படுகாயமடைந்துள்ளார். பொதுமக்களுக்குச் சொந்தமான ஐந்து வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. (மு)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.